புதினப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது. ௨ விரோதி ௵ (1889) ஆவணி௴ உ௨௳ ஆரம்பமானது

பத்திரிகை விலை.
யாழ்ப்பாணப் பட்டினம் ௵ 5-00.
இலங்கை, இந்தியா " 8-00.
தென்னாப்பிரிக்கா " ரூபா 9-00.
தனிப்பிரதி சதம் 5.
☞ முற்பணம் அனுப்புவோர்க்கே பத்திரிகை அனுப்பப்படும்.

# இந்துசாதனம்

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும், ஆன்ற பெருமை தரும்".

"சீர்பூத்த கருவிநூ ணுணர்ச்சி தேங்கச் செம்பூத்த சிவாகம மங்க ளோங்கப், பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப் பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்,
பேர்பூத்த வொளனந்த நினிதா நாங்கப் பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த, வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்."

"வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

விளம்பர விகிதம்.
முதல்முறைக்கு இஞ்சுக்கு ரூபா 10-00.
அடுத்தமுறைக்கு ரூபா 5-50.
மற்றமுறைக்கு ரூபா 4-00.
[illegible] விசேஷ விகிதம் பொருத்தப்படும்.
☞ [illegible]

புத்தகம்—சரு. } யாழ்ப்பாணம்:— ஸ்ரீமுக௵ புரட்டாதி௴ ௬௳; (1933 செப்டெம்பர் 21) வியாழக்கிழமை. { இலக்கம்—சஈ

## உபதேச காண்டம்.

### நான்காவது
### மாயைச் சருக்கம்.

இவ்வாறு சொல்லிய மாயவளை அசமுகி பார்த்து, "தாயே, எங்களுடைய வரலாறுகள் முழுவதையும் எனக்கு எடுத்துச் சொல்லினை; இனி உனது வரலாற்றினையுஞ் சொல்லவேண்டும்" என்று கேட்க, மாயவள் சொல்லுகின்றாள்:

'மகளே, பூர்வத்தில் யான் காசிபமுனிவருக்குப் பன்னியாகிப் பல பிள்ளைகளைப் பெற்றேன். அசுரர்களாகிய என் பிள்ளைகள் எல்லாரையும் தேவர்கள் வதைத்துவிட, நான் அதனாற் பெருங் கவலையடைந்து, புத்திரபாசம் என்னை மேலும் மேலும் வாட்டியதால் உயிர்வாழத் தரியாது, இந்தச் சிகுலபருவதத்தின் உச்சியில் ஏறி இதினின்றுங் கீழே விழுந்து என்னுயிரைப்போக்கினேன்; பின்பு அசுரேந்திரனாகிய காலநேமிக்கு மாயையென்னும் பெயருடன் பிள்ளையாகப் பிறந்தேன்; மீண்டும் காசிபமுனிவரைக்கூடி உங்களெல்லாரையும் பிள்ளைகளாகப் பெற்றேன். உன் மூத்தோராகிய சூரன் முதலியோர் தேவர்களை வென்று ஏவல்கொண்டு சிலரைச் சிறை வைத்தமையைக்கண்டு, நான் என் முந்திய கவலை முழுவதும் நீங்கி மகிழ்ச்சியோடு இருந்தேன். என் பிள்ளைகளாகிய சூரன் பதுமன் சிங்கன் தாரகன் என்னும் நால்வரும், எவரும் எளிதில் அடைதற்கரிய மேலான பதவிகளைப் பெற்றனர். நானும் இப்பொழுது இந்த ஸ்ரீகுலமலையை அடைந்துள்ளேன்; இங்கிருந்து அருந்தவஞ்செய்து கைலாயத்தையடைந்து எங்கள் தாயாகிய உமாதேவியாரின் திருவடிகளை இனிமேல் அடைவேன்; நீயும் அப்படியே தவஞ்செய்து கைலாசத்திற் சேருவை"

இப்படிச்சொல்லிய தாயைப் பின்னரும் அசமுகி நோக்கி, "அன்னையே, காசிபமுனிவர் உன்னைப் பிரிந்த காலத்தில் இருந்த நிலைமையைச் சொல்லவேண்டும்" என்று கேட்க, மாயவள், "மகளே, காசிபமுனிவர் என் பிரிவாற்றாது விரகதாபத்தால் வருந்துவதைக் கண்டு, அவர் பிதாவாகிய பிரமதேவர் அம்முனிவரிடம் வந்து, தவத்திற் சிறந்த காசிப முனிவனே, பெண்ணாசையின் பாற்பட்டு இப்படிக் கலங்குவது உனக்கு அடுக்குமா? நீ வருந்தற்க, என்று தேற்றி அக்காசிபமுனிவருக்கு, புலத்தியமுனிவருடைய புதல்வியை மணமுடித்து வைத்தார். இப்பொழுது அவளே அம்முனிவருக்குப் பன்னியாயுள்ளாள்" என்று கூறினாள் "மாதாவே, பூர்வ வைபவங்களையெல்லாம் நீ எங்ஙனம் அறிந்தனை" என்று அசமுகிகேட்க, "மகளே, எங்கள் குலகுருவாகிய சுக்கிராசாரி சொல்ல, இவற்றையெல்லாம் அறிந்தேன்; அன்றியும் யானும் திரிகால ஞானமுடையேன்" என்று மாயை விடைகூறினாள். இப்படிக் கூறிய தாயாகிய மாயவளை அசமுகி வணங்கி அவளுடனிருந்து அரிய நோன்பு இயற்றிக் கைலாயத்தை அடைந்தாள்.

இவ்வரலாறனைத்தையும் சூதமாமுனிவர் சொல்ல நைமிசவன முனிவர் கேட்டு மகிழ்ச்சியடைந்தார்கள்

[மாயைச் சருக்கம் முற்றிற்று]

### சென்றுவிட்டார்.

இலங்கைத் தேசாதிபதியான சேர் கிறெயம் தொம்சன் அவர்கள் நேற்றைய தினம் (20-9-33) இங்கிலாந்துக்குப் பிரயாணமானார்.

— —

### சேர் S ராதாகிருஷ்ணன்

இந்திய மேதாவியான சேர்: S. ராதாகிருஷ்ணன் இந்த செப்டெம்பர் மாதக் கடைசிப்பகுதியில் இலங்கைக்கு விஜயஞ் செய்து சில சொற்பொழிவுகள் ஆற்றுவர் என்று அறியக் கிடக்கிறது.

### பழத்தினுள் பழம்.

தும்பரைத் தோட்டத்திலுள்ள ஒருவர் சென்ற வாரம் ஓர் பப்பாசிப் பழத்தை வெட்டியபோது அதினுள்ளே, 9 அங்குல நீளம், 6 அங்குல சுற்றளவுள்ள வெளரிப் பிஞ்சுமாதிரி நீண்டு பச்சைநிறமாக ஒரு காய் இருந்தது. அதைப் பார்த்த எல்லோரும் அதிசயங்கொண்டார்கள். அது ஒரு அதிசயப்பழம் என்றுதான் சொல்லவேண்டும்.

### நொத்தாரிசுமார் மகாநாடு.

சென்ற சனிக்கிழமையன்று பொறளையில் அகில இலங்கை நொத்தாரிசுமார் மகாநாடு ஒன்று கூடியது. நொத்தாரிசுமாருக்குரிய புதிய சட்டத் திருத்தத்தைப்பற்றி யோசிப்பதற்காகவே மேற்படி மகாநாடு கூடியதாகும்.

வடமாகாணத்தில் இருந்து நான்கு பிரதிநிதிகள் ஆங்குச் சமுகமளித்தனர். மேற்குபடி சட்டத்திருத்தம் சம்பந்தமாக ஒருவர் ஓர் பிரேரணையை எடுத்தாண்டனர். அப்பிரேரணையைத் திருத்துதற்காக வடமாகாணப் பிரதிநிதிகளுள் ஒருவரான ஸ்ரீ. V நாதர் என்பவர் விரும்பினர். தலைவர் இடங்கொடுக்காமையால் அவர் மகாநாட்டினின்றும் வெளிப்போந்தார். மற்றைய வடமாகாணப் பிரதிநிதிகள் வெளிவரவில்லை.

### இலங்கையில் ஜப்பானிய வங்கி:

இலங்கையில் ஜப்பானியர்களின் வியாபாரம் பெருகி வருதலால் கொழும்பில் ஜப்பான் வங்கி ஒன்று ஏற்படுத்தப் போகிறார்களாம்.

### பிரான்சிய மந்திரியின் மரணம்.

ஐரோப்பிய மகாயுத்தம் நடந்த காலத்தில் பிரான்ஸ்தேசத்து அக்கிலநாட்டு மந்திரியாயிருந்த ஸ்ரீபின் பைஷன் என்பவர் சென்றதிங்கட்கிழமையன்று தேகவியோகமாயினர் என்று அறியக்கிடக்கின்றது.

### இலங்கை மாணவரும் ஜப்பானும்.

"ஜப்பானியக்கைத்தொழில்களைப்பற்றி ஆராய்ந்து கற்கவிரும்பும் இலங்கைமாணவர்களை ஜப்பான் தேயம் மனப்பூர்வமாக வரவேற்கும் இலங்கை மாணவர்கள் ஜப்பானில் கைத்தொழிற்கல்வி பெறுதற்கான ஏற்பாடுகளைச்செய்வது கஷ்டமல்ல" என்று ஜப்பானிய அரசியல்ஞானியும், பிரமுகருமான வைக்கவுன்ற் இஷி என்பவர் கொழும்பு "அப்ஸேவர்" பத்திரிகை நிருபர் ஒருவருக்குக் கூறினர்.

### மன்னாரில் தண்ணீர்ப் பஞ்சம்.

திரும்பவும் மன்னாரில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதாக அறிகின்றேம். சென்ற மாதத்தின் கடைசிப் பகுதியில் பெய்த மழையினாலும் நன்மை ஏற்படவில்லையாம்: தெருவீதிகளிலிருந்த தண்ணீர்க்குழாய்கள் பூட்டப்பட்டிருக்கின்றனவாம். குழாய்களிருக்கும் இடங்களில் தண்ணீரெடுப்பதற்கு அநேக சனங்கள் எப்போ திறபடுமென எதிர் பார்த்தபடியேயிருந்து திறபட்டதும் அவ்விடம் வந்து முறையின்படி தண்ணீரெடுத்துச் செல்கின்றனராம். ஒருவர் ஒரு குளத்தில் தண்ணீரெடுக்கச்சென்றால் அவர் திரும்பிவர ஏறக்குறைய 2 மணித்தியாலங்கள் செல்லுமாம்.

## மனிதனும் அவன் லட்சியமும்.

(ஸ்ரீ M. ஞானசம்பந்தம் பீ. ஏ. எழுதுவது.)

எண்ணரிய பிறவிகள் யாவற்றினுள்ளும் மானுடப் பிறவியே மேலானதெனச் சொல்லுவர். மனிதன் தனது வாழ்க்கையை ஓர் தாமரைப் புஷ்பத்தின் வாழ்வைப்போல நடாத்தவேண்டும். தாமரைமலர்தெளிந்த குளத்தின்கண் விளங்கி சூரிய கிரணத்தைக் கிரகித்துப் பொலிகின்றது. அதேபோல் மனிதனும் இப்பூவுலகம் என்னும் தடாகத்தில் விளங்கி இறைவன் என்னும் சூரியனின் திருவருட் கிரணங்களைப் பெற்று மிளிரவேண்டும்.

நாம் சிறந்தவர்கள் எனக் கருதப்படும் மனிதர்க்கிடையே எவ்வளவோ தீக்குணங்கள் உண்டு; நாம் தீயவர் என்று கருதுபவர்க்கிடையில் எவ்வளவோ நற்குணங்களும் உண்டு. எனவே, எம் சகோதரராகிய மனிதரை நாம் குறைகூறி வீணே காலத்தைப் போக்கவொண்ணாது. ஒவ்வொருவனும் யதேச்சாதிகாரமாக நினைக்கவேண்டும். அதில் அவனைக் கட்டுப்படுத்தவொண்ணாது.

மனிதன் சமானிலவனல்லு; என்பு, தசை நரம்பு முதலாம் பொருள்களினுல் ஆக்கப்பட்ட தேகத்தில் இருந்து மனிதனின் உண்மைத் தன்மை இப்படி என்று நாம் சொல்லிவிட முடியாது. அளவிடற்கரிய ஆற்றல் படைத்த இறைவன் அம்சமே மனிதன்; அந்த இறைவனை மனிதன் வணங்கவேண்டும். அதுமாத்திரமன்றி இறைவனை அறிதற்கு முயற்சிப்படும் மற்றையோருக்கும் அவன் ஆணை புரிதல் வேண்டும். இறைவனை வணங்கி, அவனை அறிந்தால், பின் இப்பூவுலகில் அறிய வேண்டியதொன்றுமில்லையாம். மனிதனின் சரீரம் எங்கும் தானேயாய் வியாபித்து நிற்கும் இறைவனின் உகந்த ஆலயமாகும். எனவே இந்த ஆலயத்தை நாம் எப்போதும் பரிசுத்தமாய் வைத்திருக்கவேண்டும் நாம் பரிசுத்தராயிருந்து பொல்லாங்கென்பவை எல்லாம் தவிர்த்துக் கருமஞ் செய்வோமானால், பல கருமங்களைச் சாதித்தவராவோம். மனிதன் தேவ அம்சம் பெற்றவன்; எனவே அவனும் இறைவனைப் போலப் பரிசுத்தமுடையவனாக இருத்தல் வேண்டும். இப்படியான பரிசுத்தம் ஒருவனிடம் இல்லாவிட்டால், அவனுக்கு மனச்சாந்தி என்பது அணுத்துணையும் ஏற்படாது என்பது நிச்சயம்.

எமக்குமுன் பிறந்தவர்களும் இறந்தவர்களுமான சிலரைப்பற்றி எமக்கு ஞாபகமிருக்கிறது. நாங்கள் ஒருபோதும் கண்டிராதவர்களும் எமக்கு எவ்வளவோ காலத்திற்குமுன் இறந்தவர்களுமான பலரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். எம்மோடு வசிப்பவர்களை நாம் நேராகக் கண்டு அவர்களுடன் ஊடாடுகிறோம். ஆனால், இனிப் பிறக்கப்போகிறவர்களைப் பற்றி எமக்கு என்ன தெரியும்? ஏதும் தெரியுமா? அவர்கள் எப்படிப்பட்டவர்கள் எவ்வாறு கருமம் ஆற்றுவர் என்பதைப்பற்றி எமக்கு இம்மியளவேனும் தெரியாதே. நான் அதாவது ஆன்மா சத்துப்பொருள், நானும் பிரமமும் ஒன்றே என்ற உண்மையை அறிவதே அதன் லட்சியமாகும். அந்த லட்சியத்தைப் பூர்த்தியாக்குதற்கான கருவியாக இந்தப் பூவுலகம் இருக்கின்றது.

மனிதன். அதாவது ஆத்ம சத்துப் பொருளாகிய பிரமத்தின் அம்சம். "தத்வமசி" அதாவது, ஹே. மனிதனே, நீஅதுவே என்றார் நாம் முன்னைய ரிஷிகள். யேசுக்கிறிஸ்துவும் இதனலன்றோ, "நானும்என் பிதாவும் ஒன்றே என்றார். இதனையறியாதமனிதன் யானைதன்கையால்மண்ணை வாரிப்பட்டதுபோல் அறியாமையில் மூழ்கித் தான் பாவிஎன்று பரதவிக்கிறான்.

மனிதன் சத்தியரூபமாகிய இறைவனின் தோற்றமே. எனவே அவன் சத்திய நெறியினின்றும் பிறழவொண்ணாது. சத்தியத்தைக் கடைப்பிடித்து ஒழுகிக் கருமம் ஆற்றுவனேயானால் மனிதன் தனது லட்சியத்தைப் பூர்த்தி செய்தவனாவான். இப்பூவுலகத்தில் இருக்கும் போதே அவன் சத்தியத்தைக் கடைப்பிடிப்பானுனல், இந்தப்பூவுலகம் அவனுக்கு மோட்ச பூமியாய் விளங்கும்.

### நூல்களைப்பற்றிய குறிப்பு.

#### திருவருள் மாலை.

இதன்கண் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, புராணம் முதலிய அருட்பாக்களும், பிரமவித்தைப் பாகமும், உடலறி விளக்கம், திருஞானத் தாழிசை என்னுமிவைகளும், சிவரூபானந்த சுவாமிகள் போற்றிச் சங்கீர்த்தனம், குருமூர்த்தி தோத்திரம் முதலியனவும் அடங்கியுள்ளன. இவை நல்லூர் "திருவருள் நம்பி" சண்முகம் சின்னத்தம்பி என்பவரால், தொகுத்து நமது சைவப்பிரகாசயந்திரசாலையில் அச்சிடுவிக்கப்பெற்றன. பிரதி ஒன்றன்விலை சதம் 15. (2½ அணா) அன்பர்கள் வாங்கிப் பாராயணஞ் செய்யத்தக்கது.

#### பூமண்டல புராணம்.

இது தமிழ் ஆருக்ரமாணவர்க்குப் பயன்படும்வண்ணம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியருள் ஒருவராகிய ஸ்ரீ. ஆ. வீ. மீசாமசுந்தரமவர்களால் இலகுவான தமிழ் வசனநடையில் எழுதிச் சித்திர சகிதமாக அச்சிடப்பெற்றுள்ளது. இராமர், கௌதம புத்தர் அசோகர், கொலம்பஸ் முதலிய மகான்களுடைய சரித்திரங்கள் அடங்கியுள்ளன. பிரதியொன்றின் விலை சதம் 40. (அணா 7) பிரதிகள் மேற்படி நூலாசிரியரிடத்திலும், இங்குள்ள பிரபல புத்தகசாலைகளிலும் பெறற்பாலன.

எமது பார்வைக்கனுப்பிய இரு நூல்கள் பொருட்டும் நன்றி கூறுகின்றேம்.

### தெருவெல்லாம்
### தங்கக் குவியல்.

டென்வர் நகரிலுள்ள தெருக்களிலெல்லாம் தங்கமே குவிந்து கிடக்கின்றது.

சமீபத்தில் செரி பள்ளத்தாக்கிலிருந்து புறப்பட்ட ஒரு பெரிய வெள்ளமானது டென்வர் நகருக்குள் பாய்ந்தது. அவ்வெள்ளமானது ஏராளமான மண்ணையுங் கொண்டுவந்து தெருக்களை மேடாக்கியது. வெள்ளம் வற்றியபின் பார்த்தபோது தெருக்களில் எங்கும தங்க மணல்கள் குவிந்து கிடப்பதைக் கண்டனர். மேற்படி வெள்ளம் சுமார் 4கோடி தொன் மண்ணைக் கொண்டுவந்து சேர்த்ததாயும், ஒரு கோடி டொலர் பெறுமதியுள்ள தங்கத்தை வெள்ளம் கொண்டுவந்து போட்டுவிட்டதாயும் அதிகாரிகாரிகள் மதிப்பிடுகின்றனர். இதையறிந்த சனங்கள் மண்ணால் மூடப்பட்டிருக்கும் தெருக்களை வெட்டிப் பொன் எடுக்கின்றனராம. வேலையற்றோர்கள் நூற்றுக்கணக்காகப் பெருந்தமழையையும் பொருட்படுத்தாது தங்க மணலை வாரிக்கொண்டிருக்கின்றார்களாம். சுதேச நாட்டியம்.

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: ஸ்ரீமுகஹு
புரட்டாதிமீ ௬வ வியாழக்கிழமை.

## இலங்கை அரசியற்றிருத்தம்.

1

இலங்கைப் புதிய அரசாங்கசபைப் பிரமாணங்களும் நிபந்தனைகளும் முறைகளும், இலங்கைவாசிகளிடத்து முன்னிருந்த அற்ப சுவாதீனங்களைத்தானும் கெடுத்து, குறித்த அரசாங்கசபைப் பிரதிநிதிகளை வாய்விடாச் சாதிகளாக்கிவிட்டன என்பதைச் சிங்கள மக்கள் உள்ளபடி உணர்ந்து சொல்வதற்கு ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் சென்றன. "பட்டாலறிவன் சண்டாளன்" என்றவிதமாக அரசாங்கசபை மந்திரிமார் இலங்கைத் தேசாதிபதியிற் றோற்றுவித்திருக்கும் சுயேச்சாபத்தியத்தையும், கேட்பாரில்லாத அதிகாரத்தையும், தங்களுடைய அடிமைத்திறத்தையும் உணர்ந்து இந்த டோனமூர் அரசியன் முறையை முற்றாக மாற்றி ஏதும் சுவதந்திரத்தை ஊரவர்களுக்கு உதவக்கூடிய முறையை அநுசரிக்கவேண்டுமென்று தேசாதிபதியவர்கள் மூலமாக, குடியேற்றநாட்டு மகாமந்திரிக்கு மனுப்பத்திரம் அனுப்பலாயினர். அந்த மனுப்பத்திரத்தின் சாரம் இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்தில் மொழிபெயர்த்து வெளியிடப்பெற்றுள்ளது.

அரசாங்கசபை மந்திரிமார் குறித்த மனுப்பத்திரத்தை எழுதியதோடு அமையாது அது சம்பந்தமாகத் தேசாதிபதிக்கும் அவர் செய்த அக்கிரமங்களையும் பிடிவாதச்செயல்களையும் எடுத்துக்காட்டி ஒரு கடிதம் எழுதியுள்ளனர். மந்திரிமாரும் ஏனைய சனப்பிரதிநிதிகளும் இலங்கைவாசிகளும் செய்யவிரும்புகிற அரசாங்கச் சீர்திருத்தத்திற்கு இப்பொழுதுள்ள தேசாதிபதி இன்னமும் மாறாகவே நிற்கின்றாரென்பதும் அந்தக் கடிதத்தில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றது. இவ்வாறான பிடிவாதகுணமுள்ள தேசாதிபதி இலங்கையில் முன் எப்போதாயினும் வந்ததில்லையெனலாம்.

இவை நிற்க, இப்புதிய அரசியன்முறை இலங்கைவாசிகளின் சுவாதீனத்தை அறவே கெடுத்துவிடு மென்பதை முன்னதாகவே யறிந்து நுண்ணிய விவேகமுடையவர்களாகிய யாழ்ப்பாணத்துத் தமிழ்மக்கள் இச் சங்கத்திற் பங்குபற்றாது விலகிநின்றனர் இங்ஙனம் பங்குபற்றாமையினால் யாழ்ப்பாண மக்களுக்கு என்றும் நீங்காப் புகழுண்டலல்லாமல், எவ்வகையான குறைவும் வந்ததில்லை, வருவதுமில்லை. இனி, யாழ்ப்பாணத்தவருட் சிலரினுஞ் சிலர் எப்படியாயினுமாகுக, இந்த அரசாங்கசபையுள் தாங்கள் புகுந்துவிடத்தான் வேண்டுமென்று நிற்கிறார்களே, இவர்கள் முடிவென்ன, இவர்களும் யாழ்ப்பாணத்தவர்கள்தாமே என்று யாரும் ஆட்சேபஞ் செய்யின், அவர்களுக்கு யாம் சொல்லத்தக்க சமாதானம் ஒன்றுண்டு. நீருக்கு நுரையும், நெல்லிற்கு உமியும், பூவிற்கு முள்ளும் ஆகிய தோஷங்கள் இயல்பாக இருத்தல்போல, எந்தச் சாதியாருள்ளும் எந்தத் தேசத்திலும் எந்தக் காலத்திலும், பெருந்தன்மையின்றி, சுயநலமே கருதும் கோடரிக்காம்புகள் உண்டென்பதாம். அப்படியான குறைவுக்கு இந்த யாழ்ப்பாணம் புறநடையல்ல. இங்கும் உண்டுதான் சிங்களமக்களே இந்த அரசியன்முறை உதவாதெனத் தங்கள் அநுபவசித்தமாகக் கண்டு இதனை மாற்றவேண்டுமென்று இலங்கை மகாமந்திரிக்கு மனுப்பத்திரம் அனுப்பிய பின்னரும், இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் நேரில் அறிந்துகொண்டும், இங்குள்ள அந்தச் சிலரினுஞ் சிலர் "தக்கதைத் தா" என்ற பிரகாரம் இன்னமும் அரசாங்கசபையிற் புகவேண்டுமென்றுதான் நிற்கின்றார்கள். தாய்க்கொலை சால்புடைத் தென்பவரை என்செய்யலாம்! இவர்களைத் தெருட்டுதலும் அங்ஙனந்தெருட்டலினால் இவர்கள் திருந்துவதும் அசம்பாவிதமாம்.

## உலகம் பலவிதம்.

—:o:—

(முற்றொடர்.)

"அன்று பின்னேரம் அவர் வழக்கமாக வரும் நேரத்திற்கு உத்தியோகதானத்திலிருந்து மீண்டுவரவில்லை; பொழுதுபட்டு எட்டு மணியுமாய்விட்டது; அவர் வரவில்லை; அதனால் என்மனசிற் கிலேசம் உண்டானது; ஒன்பதுமணிவரையிற் பார்த்தேன்; அவர் வரக்காணேன்; தனியேயிருக்கப் பயமாயிருந்தபடியால் தலைவாசற் கதவைமாத்திரம் பூட்டிவிட்டு விளக்கும் எரித்துக்கொண்டு நித்திரையில்லாமற் படுத்திருந்தேன், 10½ மணி வரையிலும் உறக்கமில்லை. அதன்மேற் சிறிது அயர்ந்துவிட்டேன்; தலைவாசற் கதவில் யாரோ பட, பட, என்று தட்ட நான் கண்விழித்து அது யார்? என்று கேட்டேன்; அது நான் தான் என்று சொல்லவே, அவர் என்று அறிந்து கொண்டு உடனே கதவைத் திறந்துவிட்டு நின்றேன்; அவருடன் வந்த சின்னத்துரை உள்ளேவாராமல் மீண்டு போய்விட, அவர் மாத்திரம் உள்ளேவந்து தலைவாசலிலிருந்த சார்மனைக்கதிரையில், தொப்பென்று விழுந்து படுத்துவிட்டார்; ஐயோ, உங்களுக்கு என்ன சுகயீனம், என்று பதைபதைப்போடு கிட்டிப் போய் அவர் நெற்றியைத் தொட்டுக்கொண்டு கேட்டேன்; 'எனக்கு ஒன்றுமில்லை; கொஞ்சம் அயர்ச்சியாயிருக்கிறது' என்று வாயைத்திறந்து சொன்னார்; சொல்லும்போது அவர் வாயிலிருந்து ஏதோ குடிவகையின் மணம் என் முகத்திலே தட்டியது; நான் முகத்தை மறுபக்கந் திருப்பிக்கொண்டு, 'கொஞ்சம் கோப்பி வைத்துக் கொண்டுவரட்டுமோ' என்றேன். 'எனக்கு ஒன்றும் வேண்டாம்; என்னைத் தொந்தரை செய்யாதே; நீ போய்ப் படு' என்று சினத்து சொன்னார்."

* * *

"ஒன்றுஞ் சாப்பிடாமற் படுக்கின்றீர்களா, பசியல்லவோ, கொஞ்சமாக ஏதுஞ் சாப்பிட்டுவிட்டுப் படுங்களேன்; இல்லாவிட்டாற் பாலாயினுங் குடித்துவிட்டுப் படுங்களேன்; இராப்பட்டினி கிடக்கவொண்ணாதல்லவா' என்று பின்னரும் நான் பரிவுடன் கேட்டேன். அவர் என்னை ஏறிட்டுப் பார்த்து 'நீ போ என்றாற் போகமாட்டாயோ? தொந்தரை பண்ணாதே என்று எத்தனைமுறை உனக்குச் சொல்லுகிறது, அப்பாலேபோ' என்று என்னைச் சீறி அதட்டிக் கோபிக்க, நான் அழுதுகொண்டு ஒருபுறத்தே ஒதுங்கி நின்றேன். அவர் அறிவு மயங்கிக்கிடந்தாரோ உறங்கினாரோ, நான் அறியேன் அதன்பின் ஒன்றும் பேசவில்லை; நான், தலைவாசலில் ஒரு தூணோடு சார்ந்தபடி அழுதுகொண்டிருந்தேன்; என்னை ஏன் என்று கேட்பார் எவருமில்லை, இதற்கிடையில் இளைய குழந்தை, அறையுட் படுத்திருந்தது, அழ, நான் அறையுட் சென்று அதை நித்திரையாக்கிவிட்டு மீண்டு வந்து தலைவாசலில் அந்த இடத்திற்றானே எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிக் கொண்டு நெடுநேரம் இருந்தேன்; அந்தக் கெட்டபயல் சின்னத்துரைதான் என்குடியை நாசமாக்க வந்துபுகுந்தான்; இவர் ஒருபோதுங் குடிவகையைக் கண்டும் அறியாரே, குடிப்பவர்களை வீடுவாசலில் அடுக்கவும் மாட்டாரே, இப்படிப்பட்ட இவரை அந்தச் சண்டாளனல்லவா கெடுத்துவிட்டான்; அவனை இன்னமும் இங்கே வரவிட்டால் நிச்சயமாய் அவன் என்குடிக்குக் கொள்ளி சொருகிவிடுவான்; நாளை முதல் அவனை இந்த வாசற்படியில் அடிவைக்கவும் விடக்கூடாது என்று இப்படிப் பலவாறு நினைத்துக்கொண்டு தூணிற் சார்ந்தபடி அயர்ந்துவிட்டேன்."

* * *

'விடியற்புறம் 5 மணிவரையில் கண் விழித்துப்பார்த்தபோது, அவர் அந்தக் கதிரையில் அந்த நிலையிற்றானே கிடக்கக் காணப்பட்டார். ஒருவாறு அவரை எழுப்பிப் படுக்கையறையுட் கூட்டிக்கொண்டுபோய்ப் படுக்கச்செய்துவிட்டு நான் மிக்க கவலையோடு காலையிற் செய்யவேண்டிய கருமங்களைச் செய்து முடித்தேன். 8 மணியாய்விட்டது. அவர் எழும்பியபாடில்லை. உத்தியோகதலத்திற்குப் போவதற்கு நேரம் போய்விட்டது; போகவேண்டுமல்லவா? இல்லாவிட்டால் இன்றைக்கு மாத்திரம் "லீவுக்கு" எழுதியனுப்ப வேணுமல்லவா என்று பதைபதைப்போடு சொன்னேன். அமுதம், விடிந்துவிட்டதா? என்று அவர் படுக்கைவிட்டு எழும்போது என்னைக் கேட்டுக்கொண்டு எழுந்தார். அமுதம் என்று என்னை அவர் அந்த நேரஞ் சொன்னது உண்மையாய் என் காதிற்கும் அமுதமாகவே யிருந்தது. நான் சிறிது மனம் ஆறி, 'வெளியிலே போய்ப்பாருங்கள்; எங்களுக்கு இனி எப்பொழுதுதான் விடியுமோ தெரியவில்லை' என்றேன். அவர் மணிக்கூட்டைப்பார்த்தபோது 8 மணி 10நிமிஷமாகக் கண்டார். ஐயையோ, நேரம் போய்விட்டதே; இதற்கென்ன செய்வது என்று யோசித்து, வேறொன்றுஞ் செய்ய முடியாமைமையினால் அன்றைக்குத் தமக்கு லீவு கொடுக்கும்படி ஒரு கடிதம் எழுதி தமமோடு உத்தியோகம்பார்க்கும் வேறொரு சிநேகிதனிடம் கொடுத்தனுப்பிவிட்டு வெட்கத்தோடும் துக்கத்தோடும் இருந்தார். அன்று இரவு நடந்த கருமங்களெல்லாம் எனக்கு ஒரு சொப்பனம்போலத் தோன்றின."

* * *

அன்று முழுவதும் அவர் வெளியிற் போகவும் எவருடனும் பேசவும் வெட்கப்பட்டார்; என்னைத்தானுங் காணவும் என்னுடன் ஏதும் பேசவும் கூச்சப்பட்டார்; தனியேயிருந்து நெடுநேரம் யோசித்தார்; பெருமூச்சு விட்டார்; பின் என்னைக் கூப்பிட்டு, அமுதம், சென்ற இரவு நடந்த காரியங்களை நினைக்க நினைக்க எனக்குப் பெரும் வெட்கமா யிருக்கிறது; இவைகளெல்லாம் கூடாதவரோடு கூடியபையால் வந்த கேடு. உன்னையும் நான் கொஞ்சங் கோபித்துப் பேசிவிட்டேன்போலிருக்கிறது; குறைநினையாதே, இனி அந்தப்போக்கிலிப்பயல் இங்கு வராமற் பார்த்துக்கொள்ளுகிறேன்; பட்டாலறிவன் சண்டாளன் என்றவிதமாய் ஒரு முறை பட்டுப் பார்த்தாற்றான் நல்ல புத்தி வரும்; ஆனால் நீ இதை வெளியிற் பேசாதே" என்று எனக்கு ஆதரவாகச் சொன்னார். நானும் அவர் சொன்னதைக் கேட்டுப் பெரும் ஆறுதலடைந்து சந்தோஷப்பட்டேன்; ஆனால் என்னுடைய ஆறுதலும் சந்தோஷமும் நெடுநாள் நிற்கவில்லை. (வரும்)

## மலாயன் இலங்கைச் சங்கம்.

யாழ்ப்பாணத்தில் உள்ள மேற்படி சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் நாளையத் தினம் (22-9-33) பகல் 11 மணியளவில் கிரிமலையிற் கூடும் என அறிகின்றோம்.

## விவாகம்.

யாழ்ப்பாணம் கந்தர்மடம் வாசரும் குத்தகை காரருமான ஸ்ரீ R M வேலுப்பிள்ளை அவர்களின் புத்திரன் ஸ்ரீ ஜெயரத்தினம் அவர்களுக்கும் அச்சுவேலி ஸ்ரீ S ஐயாத்துரை அவர்களின் புத்திரி ஸ்ரீமதி சிவத்திற்கும் சென்ற 14-ந்தேதி யிரவு மணமகளில்லத்திற்றானே விவாகம் சிறப்பாக நிறைவேறியது. மணமக்கள் நீடுவாழ்க.

## களவெடுக்குநோக்கமாக நின்றான்

யாழ்ப்பாணம் பறங்கித் தெருவைச் சேர்ந்த ஜோசப் இராஜா இரத்தினம் என்பவன் ஒரு காரணமுமின்றித் தெருவீதியில் நின்றான் என்றும், அப்படி நின்றமைக்குக் காரணம் களவெடுக்கும் நோக்கமேயென்றும் பொலிஸ் சார்ஜன்ற் அருளப்பர் யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்தில் சென்ற செவ்வாய்க்கிழமை வழக்குத் தொடர்ந்தார்.

எதிரி தான் குற்றவாளியே என்றும், இதற்குமுன் களவுக் குற்றத்தின் பேரில் நான்குமுறை தண்டனைபெற்றவன் என்றும் ஒப்புக் கொண்டான். எனவே நீதிபதி அவனுக்கு 3 மாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார். அத்துடன் அவன் ஒருவருஷத்திற்குப் பொலிஸ் மேற்பார்வையில் இருக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டது.

## அரசாங்கசபை அங்கத்தவர் எங்கே?

**அரசாங்க சபையில் பலப்பிற்றியாப் பிரதிநிதியாயுள்ள மிஸ்ரர் G. ரூபர்ட் டி. செரயிஸா என்பவர் தாம் துப்பாக்கிகள் வைத்திருக்க வேண்டியதற்கான அநுமதிப்பத்திரங்களைப் புதுப்பிக்காமையால் அவர்மீது வழக்குத் தொடரப்பட்டு அறிவித்தல் அளிக்க ஒழுங்கு செய்யப்பட்டது. மிஸ்ரர் ரூபர்ட் டி. செரயிஸாவைத் தான் பல விடங்களிலும் தேடிக் காணாமையால் அறிவித்தல் கொடுக்க வில்லையென்று சேவகன் நீதிஸ்தலத்திற் கூறினான். நீதிபதி, அரசாங்கசபைக் காரியதரிசி (கிளார்க்) மூலமாகப் புதிய ஓர் அறிவித்தல் மிஸ்ரர் செரயிசாவுக்கு அளிக்கப்படல் வேண்டுமென உத்தரவு பிறப்பித்தார்.**

## டக்ரர் அன்னிபெசன்ட்.

பிரமஞானசங்கத் தலைவியாயுள்ள டக்ரர் அன்னிபெசன்ட் அம்மையார் மிகவுஞ் சுகவீனமாக விருக்கின்றாரென்று சென்னையிலிருந்துவந்த செய்தியொன்று கூறுகின்றது.

## பூகம்பத்தால் 5000 பேர் மரணம்.

சீனாவிலுள்ள தைவான் என்னுமிடத்தில் சென்ற செவ்வாய்க்கிழமையன்று பயங்கரமான ஓர் பூகம்பம் நிகழ்ந்ததன் பயனாக 5000 பேர் மாண்டனர் என்று ஓர் செய்தி கூறுகின்றது.

## 3000 பேருக்கு வீடில்லை.

மெக்சிக்கோ தேசத்தில் சென்ற செவ்வாய்க்கிழமையன்று உக்கிரமான சுழல்காற்றொன்று வீசியது அதன் பயனாக 50 பேர் மாண்டனர்; 3000 பேர் இருக்க வீடின்றித் தவிக்கின்றனர்.

## அகில இந்திய முஸ்லீம் மகாநாடு.

**அகில இந்திய முஸ்லீம் மகாநாட்டை பாடலிபுரத்தில் செப்டெம்பர் மாதம் 30-ம் தேதி நடத்துவதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்துவருகின்றன. விஷய ஆலோசனைச் சபைக் கூட்டத்தின் பொருட்டு 29-ம்தேதி யன்று டக்ரர் ஷாபத் ஆமத்கான் பாடலிபுரம் போவார் என்று சொல்லப்படுகிறது.**

## கல்கத்தாவில் பயமுறுத்தல் கடிதம்.

பயங்கர இயக்கத்தின் வேலையாம்.

**மார்ட்டின் அண்டு கம்பெனியின் பிரதம பங்குக்காரரான ஸர் ராஜேந்திரநாத் முகர்ஜிக்கு பயங்கர இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் யாரோ அநாமதேயக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதில் அவர்கள் ஒரு இடத்தையும் காலத்தையும் குறிப்பிட்டு அந்த நேரத்தில் குறிப்பிட்ட தொகையைக் கொண்டுவந்துசேர்க்காமல் போனால் பயங்கர இயக்க விபத்துக்கு ஆளாகநேரும் எனக் குறிப்பிட்டிருக்கிறார்கள். போலீஸார் இதைப்பற்றி மும்முரமாக விசாரித்து வருகிறார்கள். ஒருவரும் சிறைபடவில்லை ஸ்ரீமான் கவிநாரஞ்சன சர்க்காருக்கும் மூன்றுவாரங்களுக்கு முன் இவ்வித கடிதம் ஒன்று வந்ததாம்.**

## சங்கீத அபிவிருத்திச் சபா குவாலாலம்பூர்.

ஒன்பதாம் வருடப் பூர்த்தி விழா.

**இச்சபாவின் ஒன்பதாம் வருடப் பூர்த்தி விழா ஸ்ரீமுகஹு ஆவணிமீ 12-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை (27-8-33) அதிசிறப்பாக கொண்டாடப்பெற்றது.**

**விடய சூசிகைப் பிரகாரம் காலை 7 மணி தொடக்கம் 10 மணிவரை மேளக்கச்சேரி, பஜனை, புகைப்படம்எடுத்தல் பிரசாதம் முதலியன நடைபெற்றது.**

**பகல் 1 மணிக்கு திரு. வ. பொன்னுத்துரை அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் அங்கத்தவர் மகாசபைக் கூட்டம் கூட்டப்பெற்று 9-ம் வருட அறிக்கைப்பத்திரமும் கணக்குகளும் பார்வையிடப்பெற்று அங்கீகாரம் பெற்ற பின்னர் கீழ் கண்ட கனவான்களை அடுத்த வருட நிருவாக சபை அங்கத்தினராக தெரிவுசெய்யப்பெற்றது.**

**பிற்பகல் 4மணிக்கு சபா மண்டபத்தில் குழுமியிருந்த ஆண் பெண் பாலர்கட்கு சிற்றுண்டி தேநீர் வழங்கப் பெற்றும், சங்கீத மாணவிகளால் ஆர்மோனியம் வாசிக்கப் பெற்றும் கேட்போர் மனதை ஆனந்திக்கச் செய்யும் தம்மினிய குரலால் இன்னிசையோடும் பாடியும் சமூகமளித்த யாவரையும் கவலையற்று மெய்மறந்து புலன்கள் ஒருவகைப்பட்டு ஆனந்த சாகரத்திலாழச் செய்தனர்.**

**6-30 மணியளவில் "சுதேசமித்திரன்" பத்திரிகையில் நாடக ரூபமாக எழுதப்பட்டிருந்த "வில்வணீயம்" என்னும் சரிதையை அதி சிறப்பாக சபாசகர்களால் நடிக்கப்பெற்று 8 மணியளவில் கூட்டம் கலைந்தது.**

**6-9-33ல் கூடிய நிருவாக சபைக் கூட்டத்தில் திரு. ஆ. கந்தையா அவர்கள் திரு. வ. செல்லையா அவர்கள் கௌரவ காரியதரிசியாகவும் தனாதிகாரியாகவும்.**

**திரு. கா. இராமசாமி**
**„ K. சிவப்பிரகாசம்**
**„ பூ. சின்னத்தம்பி**
**„ செ. கனகரத்தினம்**
**„ சி கணபதிப்பிள்ளை**

**நாடகக் காரியசபை அங்கத்தவர்களாகவும் தெரிவு செய்யப் பெற்றனர்.** (கடிதம்.)

# இலங்கை அரசியற்றிட்டம்.

## அதனை மாற்றும் முறைகள்.

## தேசாதிபதியின் மறுப்பு.

### மந்திரசபையினரின் தக்க பதில்.

### தூதுக்கோஷ்டியை அனுப்புதல் நியாயமா?

:o:

இலங்கை மந்திரசபையினர் குடியேற்றநாட்டு மந்திரிக்கு அனுப்புமாறு தேசாதிபதியிடம் சமர்ப்பித்த இருமனுக்களைப் பற்றிய விவரம் சென்ற வெள்ளிக்கிழமை நடந்த அரசாங்கசபைக் கூட்டத்தில் ஒப்புவிக்கப்பட்டது.

மந்திரிமார் தாம் அளித்த மனுவில் பின்வரும் அரசியற்றிருத்தங்களை பிரதானமாகச் செய்யப்படவேண்டுமெனக் குறித்துள்ளார்:-

(1) அரசாங்க சபையில், அரசாங்க உத்தியோகஸ்தர் என்ற நாமத்தால் வழங்கப்பட்டுவரும் மூவரை உத்தியோகத்தரை நீக்குதல்வேண்டும். அவர்களின் இடத்திற்காய் மந்திரிமாரும் அவர்க்குற்ற மந்திர நிர்வாக சபையினரும் தெரியப்படல் வேண்டும்.

(2) பண விஷயங்களில் மந்திரிமாரென்றிருப்பவர் தாமே கருமங்களைத் தொடங்கவும் நடாத்தவுஞ் செய்தற்காக அவர்களுக்குரிய அதிகாரத்தை அதிகரிப்பித்தல்.

(3) மந்திரிமாரைத் தெரிவுசெய்யும் முறையை மாற்றுதல்.

இவ்விஷயத்தில் 7 மந்திரிமார்களில இரு மந்திரிமார், மிஸ்ரர் மக்கான்மார்க்காரும் ஸ்ரீ பெரிசுந்தரமும் மாறுகின்றனர். அவர்கள் தற்போது மந்திரிமாரைத்தெரிவுசெய்யும் முறை ஏற்றதெனத் தெரிவிக்கின்றனர்

(4) அரசாங்க உத்தியோகத்தரை நியமித்தற்கும், நீக்குதற்கும், வேதனம் விதிப்பதற்குமான விசாரணைச் சபை இப்போது உள்ளபடி இருப்பதை விடுத்து மாற்றியமைக்கப்படல்வேண்டும்.

(5) அரசாங்க உத்தியோகத்தர் சம்பந்தமாக எதுஞ் சட்டத்தை நிறைவேற்றுவதானால், தேசாதிபதியின் உத்தரவை முதற் பெறவேண்டுமென்று இதுகாறும் இருந்துவந்தது. இம்முறை ஒழிக்கப்படல் வேண்டும்.

(6) தேசாதிபதியின் விசேஷ அதிகாரங்களை குறைக்கவேண்டும்.

இந்தப் பிரதான விஷயங்கள் கொண்ட மனுவைத் தேசாதிபதியிடம் ஒப்படைத்த சிலநாட்களின்பின்னர் மந்திரிமார் அவரை நேரே கண்டு விஷயத்தை விளக்கினர். தேசாதிபதி, இவர்கள் கூறியன அனைத்தையும் செவியடுத்தபின், தாம் தற்போது இலங்கையில் எவ்வித பிரதானமான அரசியல்மாற்றத்திற்கும் மாறானவர் என்பதை வெட்டவெளியாகக் காட்டிவிட்டார். அதன்பின் மந்திரிமார் அவருக்கோர் கடிதம் அனுப்பினர். அது வருமாறு:—

டொனமூர் அரசியற்றிட்டம் சென்ற இரண்டுஆண்டுகாலமாக எவ்வித சச்சரவுமின்றி ஒழுங்காக வேலை செய்திருக்கின்றது; ஆனபடியினால், அதனை மாற்றுவதற்குக் காலம் வரவில்லை என்று தாங்கள் கூறியது உண்மையில் வருத்தத்திற்குரியதே. இன்னும் பெரிய காலத்திற்கு இந்த அரசியற் றிட்டத்தை நடாத்திப் பார்க்கவில்லையென்று தாங்கள் கூறுகிறீர்கள். இப்படியான அரசியற்றிட்டம் கடந்த காட்டியும் இல்லை. இத்தனை வருஷகாலத்திற்குச் சோதனை செய்தே தீரவேண்டும் என்ற நிபந்தனை முன்னமே விதிக்கப்பட்டிருக்கவில்லை. இன்னும் இந்த இரண்டு வருஷ காலம் நடாத்திப் பார்த்ததில் இருந்து எவ்வளவோ குறைகள் காணப்பட்டன. இக்குறைகள் காலம் போகப்போக மாறும் தன்மையன அல்ல. இப்படியான ஓர் நூதன அரசியற்றிட்டத்தை கால வரையறை இன்றி இன்னும் சோதனை செய்து வரவேண்டுமென்று கூறினால் நாட்டில் உள்ள அதிருப்தி அதிகரித்துக்கொண்டே வரும்.

"இதுகாறும் இந்த அரசியற்றிட்டம் ஓர் சச்சரவுமின்றி வேலைசெய்ததென்று கூறுகின்றீர்கள்; அது மெய்யானால் அதற்குக் காரணம் இத்திட்டத்தில் உள்ள சிறந்த அம்சங்கள் அல்ல; இந்தத் திட்டத்தை நடாத்தத் தெண்டிக்கவேண்டுமென்று அரசாங்கசபையினர் மிகப் பிரயாசித்தமையினாலேயே இந்த இரண்டு வருடகாலமும் அதிகசச்சரவின்றி இத்திட்டம் நடந்துவந்தது. இந்த இருஆண்டு காலமாகத் திருப்திகரமாக நடந்துவந்ததால் பூரணமற்ற இந்த அரசியலை இன்னும் நடாத்தவேண்டுமே என்பது நியாயமாகுமா?

இப்போது நெருக்கடியான காலம்; பணமுட்டு தொழிலின்மை உலகமெங்கணும் பரவிவருங்காலம்; உலகப் பொருளாதாரநிலைமை குன்றியிருக்கும் காலம்; இத்தகைய காலத்தில் மந்திரசபையினரும் அரசாங்கசபையினரும் இந்த நூதன அரசியலைத் திருப்திகரமாகநடாத்தியிருக்கின்றனர் என்பது ஒன்றுமே, இலங்கையர் சுவயராச்சியத்திற்குத் தகுதியானவர் என்பதற்குப் போதியசான்றாகும்

### மிஸ்ரர் சந்திரசேகராவின் அபிப்பிராயம்.

அரசாங்க சபையினர் தூதுக்கோஷ்டியனுப்பத் தீர்மானித்ததைபிட்டு வடமாகாணச் சனத்தலைவருள் ஒருவராகிய மிஸ்ரர் H. A. P. சந்திரசேகரா அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்:-

"அரசியலை மாற்றி அமைக்கவேண்டும் என்பதைக் குடியேற்றநாட்டு மந்திரியின் முன்னிலையில் வற்புறுத்துவதற்காகத் தூதுக்கோஷ்டி அனுப்பப்படுவதற்கு உகந்த சமயம் இதுவே. அரசியற் சீர்திருத்தத்தைப்பற்றிக் குடியேற்றநாட்டு மந்திரி ஆலோசனை செய்வார் என்று எமது தேசாதிபதியும் கூறியுள்ளார். தேசாதிபதி இப்போது இங்கிலாந்து செல்கின்றார். அவர் அபிப்பிராயம் என்னவானாலும் எமக்கு இப்போது அரசியற் சீர்திருத்தம் வழங்கவொண்ணாது என்பதே. அவருடைய அபிப்பிராயத்தைக் கேட்கும் குடியேற்ற நாட்டு மந்திரி இலங்கைமக்களுக்கு உண்மையாகவே அரசியற் சீர்திருத்தத்தில் கவலையில்லை என்று எண்ணிவிடக் கூடும். அப்படி அவர் எண்ணாதபடி செய்வதற்காகவே நாம் இங்கிலாந்துக்கு ஓர் தூதுக் கோஷ்டியை அனுப்புதல் வேண்டும்."

### "தமிழ்மகாநாட்"டின் தீர்மானம்.

இலங்கை அரசிறையில் இருந்து செலவு செய்து லண்டனுக்குப் போகவிருக்கும் தூதுக்கோஷ்டியார் சம்பந்தமாக வடமாகாணத்தில் உள்ள ஒரு சிலர் கிளர்ச்சிசெய்து வருகின்றனர் என்று அறியக்கிடக்கின்றது, இவர்கள் "தமிழ்மகாநாட்டு" நிர்வாகசபையாராம்! அரசிறையில் இருந்து தூதுக்கோஷ்டியார் பிரயாணச்செலவு செய்யவொண்ணாதென்று இவர்கள் தீர்மானித்திருக்கின்றனராம்.

இன்னும் இந்த நிர்வாகசபையாரின் அபிப்பிராயம் பின்வருமாறு:-

அரசாங்க சபையால் தெரியப்பட்டுள்ள தூதுக்கோஷ்டியார் இலங்கையில் உள்ள சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தைப் பெற முடியாது. இத்தூதுக்கோஷ்டியார் சிறுபான்மையினரின் பிரதிகள் அல்லர். அதுவுமன்றி, இவர்கள் சிறுபான்மையினரின் நலத்தைக் கருதாது, நேர்மாறான நோக்கங் கொண்டவராவர். மந்திர சபையினரால் குடியேற்றநாட்டு மந்திரிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களில் காட்டப்பட்டுள்ள அரசியற் சீர்திருத்தங்கள் இப்போது ஆவசியகமல்ல. அப்படியான சீர்திருத்தங்கள் வேண்டுமெனச் சிறுபான்மையினர் எவருங் கிளர்ச்சி செய்யவில்லை. எனவே இப்போதுள்ள அரசியற்றிட்டத்தில் பிரதானமான மாற்றங்கள் எதுவும் செய்யவொண்ணாது அப்படியான மாற்றங்கள் எதுவும் செய்யும் காலத்தில் சிறுபான்மையினரையும் பொதுஜனங்களையும் விசாரித்தே கருமம் ஆற்றவேண்டியது!"

### தியாகம் செய்த தமிழர் பங்கு பெறுவதில்லையா?

"தற்போதுள்ள அரசியற்றிட்டத்தை மாற்றவேண்டுமென்பதைக் குடியேற்ற நாட்டு மந்திரிக்கு எடுத்துச் சொல்வதற்கான தூதுக்கோஷ்டியினரை அரசாங்க சபையில் தெரிவு செய்யவேண்டும் என்ற விஷயத்தில் யாதான சொல்லக்கூடிய தொன்றுண்டு. அரசாங்கசபை அங்கத்தவர் மாத்திரமன்றி யாழ்ப்பாணப் பிரதிநிதிகள் ஒருவர் இருவர் அதிற் பங்குபற்ற வேண்டும். அரசியற் சீர்திருத்தம் வேண்டும் என்பதற்காகவே யாழ்ப்பாணத்தவர்கள் அரசாங்கசபையைப்பகிஷ்கரித்தனர்.

"உண்மையைக் கூறுங்கால் அரசியற் சீர்திருத்தம் பெறுவதற்காக யாழ்ப்பாணத்தவர்களே மற்றெல்லாரிலும்பார்க்கக் கூடிய தியாகம் செய்தவராவர். அவர்களிற் சிலர் அரசாங்கசபை ஸ்தானத்தைத் தியாகஞ் செய்தனர். இன்னுஞ் சிலர் அரசாங்கசபைக்குட் சென்றிருந்தால் மந்திரிப்பதவிகள் வகித்திருப்பார்கள். அவர்கள் அரசியற்சீர்திருத்தத்தின் பொருட்டு அவற்றையும் தியாகம் செய்தனர். எனவே யாழ்ப்பாண மக்களை இந்தத் தூதுக்கோஷ்டியில் சேர்க்காது விடுதல் கனதியற்றதும், மிக்க தீமை விளைப்பதுமான ஓர் செயலாகும்."

என்று மிஸ்ரர் ஜேம்ஸ் S மேதர் அவர்கள் கொழும்பு அப்சேவர்ப்பத்திரிகையில் எழுதுகிறார்.

### தூதுக்கோஷ்டி அங்கத்தவர்.

பின்வருவோர் இங்கிலாந்துக் கனுப்பப்படும் தூதுக்கோஷ்டியில் சேர்ந்தவராக விருப்பர் என்று தெரிகிறது.

சேர். D. B. ஜெயத்திலக
மிஸ்ரர் D. S. சேனநாயக
,, G. C. S. கொறியா [கா
,, S. W. R. D. பண்டாரநாயக்
டக்ரர் V. R. ஷொக்மன்.

இவர்களில் நால்வர் சிங்களவகுப்பைச் சேர்ந்தவர்: டக்ரர் V. R. ஷொக்மன் பறங்கியரின் பிரதிநிதி. இத் தூதுக்கோஷ்டியில் தமிழ்ப் பிரதிநிதிகளும் முஸ்லீம் பிரதிநிதிகளும் சேர்க்கப்படவில்லை யென்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

## ராகுகாலம்.

*

### ஐரோப்பிய பத்திரிகையின் கூற்று

சமீபத்தில் நிகழ்ந்த சூரிய கிரகணத்தைப்பற்றி ஹிந்துக்களிடையே இருவித அபிப்பிராயங்கள் தோன்றிவிட்டன. சூரியனை ராகு என்னும் அசுரன் விழுங்குவதாக ஹிந்துக்கள் கப்புவது மூடத்தனமென்று, ராகு என்ற அசுரனே கிடையாதென்றும் மேல்நாட்டு ஸயன்ஸ் கற்றவர்கள் கூறி மற்றவர்களை மூடர்கள் என்று சொல்லி வருகிறார்கள். ராகு என்னும் கிரகம் இல்லையென்பது அறியாமையாகுமென்று மதராஸ் மெயில் பத்திரிகையொன்றில் ஒரு கனவான் விளக்கியிருக்கிறார். ஒவ்வொரு நாளும் ராகு என்னும் கிரகம் மற்றைக் கிரகங்களைப்போல் மனித வாழ்க்கையைப் பாதித்துவருகிறதென்று, ராகுவின் தோஷம் அது உச்சமாக விருக்கும் சமயத்தில் தெரியுமென்றும் இந்த உச்சவேளை நாளுக்கு நாள் மாறி வருமென்றும், ராகு காலத்தில் எந்தக் காரியம் ஆரம்பிக்கப் பட்டாலும் அது கைகூடாதென்று சென்னை மாகாணவாசிகள் பெரும்பாலோர் நம்பிவருகின்றனர் என்றும் அவர் எழுதியிருக்கிறார். ராகுக் கிரகம் உச்சமிருக்கையில் பிறக்கும் எவரும் ஜன்மத்தில் பல இடர்களை யனுபவிப்பார்கள் என்றும், மற்ற கிரகங்களைப் போலவே ராகுவிற்கும் மனித சாதகங்களில் ஓரிடமிருக்கிறதென்றும், ஆரிய வைத்தியசாஸ்திரப் புஸ்தகத்தில் ஸ்ரீலஸ்ரீ பகவத்ஸிங்ஜீ எழுதியிருப்பதையும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழ் நேசன்.

## வயது பேதமின்றி யாவரும் படிக்க வசதிகள்.

சுமார் 2 லட்சத்து 50ஆயிரம் பேர்-பெரும்பாலும் சிறுவர்கள்-அடுத்த வாரம் முதல் லண்டன் நகரில் பதுமாதிரி கல்விவசதிகள் பெறப் போகிறார்கள். லண்டன் நகரசபையின் ஏற்பாட்டின்படி 20 ஆயிரம் வகுப்புகளில் பற்பல பாடங்களையும்பற்றி சொல்லிக் கொடுக்கப்படும். பாஷைகள், சாஸ்திரம், கைத்தொழில்கள், வியாபாரம் உள்ளிட்ட எல்லா வகுப்புகளும் நடைபெறும். நடைமுதல் வருஷத்தில் 65 ஆயிரம் பிள்ளைகளும் பெண்களும் லண்டன் நகரசபைப் பள்ளிக்கூடங்களிலிருந்தும் மாலைவகுப்புகளிலிருந்தும் படித்து வெளியேறி சொற்பச் செலவில் தங்களுக் குபயோகமான விசேஷத் தொழில்களுக்குப் பயிற்சி பெறுவது சாத்தியப்படும். இவ்வகுப்புகளில் சேருவதற்கு வயது நிர்ப்பந்தமில்லை. பாட்டனும் பேரனும் ஒரே வகுப்பில் வாசிக்கலாம்.

## மகாத்மாவின் தேகநிலைமை.

*

### காந்தி-ஹேறல்ஸ் கடிதம்.

### "சிறைபுகவொண்ணாது"

சென்ற திங்கட்கிழமையன்று பம்பாயில் உள்ள பிரபல வைத்தியராகிய டக்ரர் படேலும், டக்ரர் கிலடரும் மகாத்மாவின் தேகநிலைமை அவதானித்தனர். தேகநிலை திருப்திகரமாக இருக்கின்றதெனினும் அவர் பூர்வீயமான வேலைகளிற் பிரவேசித்து மனதிற்குச் சிரமம் கொடுக்கவொண்ணாது என அவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

அடிகள் திங்கட்கிழமை மத்தியானம் 11½ மணியளவில் தமது மௌன விரதத்தை நிறுத்தி, காத்துநின்ற ஹரிஜனத் தொண்டர்களை வரவேற்றார். அவர்கள் ஹரிஜன (தீண்டாதார்த் தொண்டில் எதிர்ப்படுங் கஷ்டங்களை அடிகளுக்கு விளக்கினர்.

### காந்தி-ஹேறல்ஸ் கடிதம்.

லண்டன் பாராளுமன்ற அங்கத்தவரும், தற்போது கல்கத்தாவில் நிற்பவருமான மிஸ்ரர் ஹேறல்ஸ் என்பவர் அடிகள் இனிச் சிறைசெல்லவொண்ணாதெனும் கருத்துக்கொண்ட ஓர் கடிதம் எழுதியிருக்கிறார். அது பின்வருமாறு:

"தாங்கள் இப்போது மிதுனபுரிக்குப் போகவேண்டுமென்று யோசனை கூறுகின்றேன். வாலிபர்களே கொலைபுரிதல் போன்ற குற்றங்களைப் பெரும்பாலும் செய்கின்றனர். அவர்கள் தங்களுடைய புத்திமதிகளைக் கேட்பார்கள். தாங்கள் அங்கு சென்றால் அநுகூலமில்லாமற் போகாது. தாங்கள் அங்கு சென்று அங்குள்ளவர்களுக்குப் புத்திமதி சொன்னால் இம்மாதிரியான வருந்தத்தக்க சம்பவங்கள் இனி நடக்காமல பெரிதும் தடைப்பட்டுவிடுமென்பது நிச்சயம்."

பின்னும் ஓர் கடிதம் மிஸ்ரர் ஹேறல்ஸ் அடிகளுக்கு எழுதினர். அது வருமாறு:

"தங்களது வாழ்க்கையின் அந்தியகாலத்தில் தாங்கள் எப்பாடுபட்டாகிலும் தங்கள் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வது அத்தியாவசியகமாகும். தங்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு கணமும் விசேஷ மகத்துவமுடையதாகும். தங்களது ஆலோசனையும் புத்திமதியும் அவசியமாக இருக்கும்போது தாங்கள் பலமாதங்கள் சிறையில் அடைபட்டுக்கிடப்பதென்பது ஏறக்குறைய ஒரு குற்றம்போலவே எனக்குத் தோன்றுகின்றது. இந்தியாவின் நண்பர்கள் எல்லோரும், இந்தியா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குள் அமைதியுடனும் சந்தோஷத்துடனும் உள்ள நாடாய் இருக்கவேண்டுமென விரும்புகின்றனர். இதற்காகப் போராடிக்கொண்டிருக்கும் எல்லாரையும் ஒருங்கு திரட்டி அவசியமானால் தியாகஞ் செய்யும்படி செய்வதே தேசத்தின் தற்காலத் தேவையாகும். உங்களுக்காக இல்லாவிட்டாலும், உங்கள் நண்பரின் பொருட்டேனும் சிறைக்குப்போகும் ஆசையைத் தடுத்துவிடல்வேண்டும் என்று தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

மகாத்மா மேற்படிகடிதத்திற்குப் பின்வருமாறு பதில் அனுப்பியுள்ளார்:

"சிறைச்சாலை செல்லுவதற்காக எனக்கு விருப்பம் எதுவும் இல்லை. ஆனால் என் சமாதானத்தின்பொருட்டு முயற்சி செய்கையில் சிறைவாசம் குறுக்கிட்டால் அதனைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்கின்றேன் என்பதைத் தங்களுக்கு விநயத்துடன் தெரிவிக்கின்றேன்".

## ஸ்ரீஜத் இராஜகோபாலாச்சாரியார்.

ஸ்ரீஜத்-வீ. இராஜகோபாலாச்சாரியாருக்கு விதிக்கப்பட்டுள்ள கடூழியச் சிறைத்தண்டனையை வெறுங் காவற்றண்டனையாகச் சென்னை யரசினர் மாற்றியிருக்கின்றனர் என்று தெரிகிறது.

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி.

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

வங்கிக்காரா மூலநிதி 8 லட்சம் ரூபா.

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 129777 00.**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.**

பங்குப்பணங் கட்டுமுறை.

*பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறுங் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.*

தினசரிப் பற்றுவரவு.

*எச்சநிதி சாாசரி 500 ரூபாவிற்குக்குறையாமல் இருக்குமானல் 3 விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.*

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

*க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதம், 8 விகிதமாகக் கொடுக்கப்படும்*

உண்டியல்கள்.

*கொழும்பிலுள்ள "சாஷனல்" வங்கியிலும் "இம்பீறியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப்பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன*

***இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.***

கடன்.

*நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறுங் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக் கொடுக்கலாம்.*

*காணி ஈடாக வைத்துக்கொண்டு பிணையுடன் கடனெடுக்கலாம். (இக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.*

**இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.**

சி. செல்லப்பா.
*மானேஜர்.*

(Q. 78. 21-8-33—30-11-33)

---

# "பவுண்மார்க்" உயர்தர ஓடுகள்.



இலங்கையிலும் இந்தியாவிலும் விற்பனையாகும்ஓடுகளில் இவையே மிக்க மலிவானவையும் அநேகநாட்பாவிப்புக்கேற்றனவையுமாகும்.

100 சதுர அடிக்கு 120 ஓடுகள் போதுமானவை.

ஒரு ஓட்டின் நிறை ஏறக்குறைய 5 இருத்தல் இருக்கும்.

யாழ்ப்பாணத்தில் அநேக பிரபல கட்டடங்களில் மேற்படிஓடுகள் பாவிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்:

*அவையாவன:*
கல்லூரிகள்
கோவில்கள்
Convent
Church
முதலியன.

## குணத்தாற் சிறந்தன! விலையாற் குறைந்தன!!

**இலங்கையில், அதிலும் விசேஷமாக யாழ்ப்பாணத்தில் எவராலும் அபிமானிக்கப்பட்டு வருவது**

**பவுண்மார்க் ஓடுகளே!**

இவை:
கோடைகாலத்தில்
உஷ்ணம்வீசாது.
அடைமழைக்குங் கசியாது.
நெடுநாட் பாவிப்புக்கேற்றன.

"பவுண்மார்க்" உயர்தர ஓடுகள்,
அகில இந்திய பொருட்காட்சியிலும்,
மைசூர் தஸராப் பொருட்காட்சியிலும்
தங்கமெடல்கள் பரிசளிக்கப் பெற்றன

**போலி ஓடுகளை வாங்கி ஏமாறாதீர்கள்.**

*தனி ஏஜண்டர்:*

மெசேர்ஸ்: **S. வீரகத்திப்பிள்ளை & சன்ஸ்.**

*யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, காங்கேசன்துறை காரைநகர்,*
டெலிபோன் இல. 93. யாழ்ப்பாணம், தந்திவிலாசம்: "ரூபி", வல்வெட்டித்துறை.

(Y. 3. 26-4-34).

---

தலைவலியுற்றபோது

# லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்

## தைலத்தை

நெற்றியிலும் கன்னத்திலும்

தேயுங்கள்;

தலைவலி உடனே மாறிவிடும்.

**அதுவுமன்றி இது இந்தியாவில் இந்தியர்களாலேயேசெய்யப்படுவது.**

இத்தைலமே எல்லாவற்றிலும் சிறந்தது.

(Y. 18. 11-2-33—10-2-34)

---

# விளம்பரம்.

ஜவுளிவகையில்

## எல்லாவிதமான துணிகளும்

**பெரியகடை, காங்கேயன்துறைத்**

தெருவிலுள்ள எமது

## சில்லறைவிற்பனைக் கடையில்

**தாங்கள் பெற்றுக்கொள்ளலாம்.**

எல்லா ஜவுளிகளும்,

## இலங்கையிற் செய்யப்பட்டன

**என்பதற்கு உத்தரவாதம்.**

*மற்றைய விடங்களிலும் பார்க்க எமது ஜவுளிகள்*

## குணத்தாற் சிறந்தன

## விலையாற் குறைந்தன.

**இன்னும், ஒருமுறை வந்து பார்ப்பின்**

**இதனுண்மை நன்கு புலப்படும்.**

## இலங்கை நெசவுத்தொழிற்சாலை

20.) லிமிட்டெட்.

---

காலத்துக்குத்தக்க மலிவுவிலை!

# மங்களூர் ஓட்டுக் கம்பேனி.

மிலிற்றறி, கவர்ன்மெண்ட், முனிசிப்பல்

கொந்திருத்துக்காரர்.

**மோர்க்கன் ஓடு, 1931 தொடக்கம் வருஷக் கொந்திருத்தாய் கவர்ன்மென்டுக்குக் கொடுக்கப்பெற்று வருகின்றது.**

*வேறு எந்த ஓட்டிலும் இல்லாத இரண்டு வரைகள் மோர்க்கன் ஓட்டில் இருக்கின்றன. இவை அடைமழைக்கும் ஓட்டைக் கசியவிடாது காத்துக் கொள்ளும்.*

*பத்துப் பதக்கம் பரிசுபெற்று, மற்ற எல்லா ஓட்டிலும் பார்க்க, அதிகம் இடத்தை மூடக்கூடிய எங்கள்* தங்கமெடல் ஓடுகள் **(Secrtariat, State Council Chamber)** *இராசாங்கப் பெரிய கந்தோர்கள், கவுன்சில் மண்டபம் முதலிய கட்டிடங்களுக்குப் பாவிக்கப்பெற்று வருகின்றன.*

தலைநகரக் கந்தோர்:–64-ம் நி-ர். ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு.

க. சே. த. சே. செல்லையாபிள்ளை.-316–ம் நி-ர். கிட்டங்கித்
தெரு, யாழ்ப்பாணம்.

சோமசுந்தர முதலியார் வளவு:-வில்லூன்றி, திருக்கோணமலை.

**W. B. S.** தர்ம சூரிய:-பெட்டிக்கலவத்தை, காலி.

*பல இடங்களுக்கும் போய், எங்கள் ஓடுகளை விற்க ஏசென்ருய் சுன்னாகம் இ. தாமோதரம்பிள்ளை நியமிக்கப் பெற்றிருக்கின்றார்.*

Y. 2. 31-3-34.)

---

*வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.*

---

Printed & Publi he l by S. ADCHALINGAM, residing at Ayanarkovilady, Van: Wes
Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai
Jaffna at their Press the Saiva Prakasa Pre s Vannarp nnai. Jaffna